**கவனிக்க.-** 2008.10.03 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி II அ), பகுதி II மற்றும் IV (அ ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1571 - 2008 ඔක්තෝබර් 10 වැනි සිකුරාදා - 2008.10.10

*1571 ஆம் இலக்கம் – 2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1138 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1139 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 1141 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும். வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, ஒற்றோபர் 17 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, ஒற்றோபர் 03 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மொனறாகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2009

மேற்குறிப்பிட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட கள்ளுத் தவறணையில் 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2009 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையிலான காலப்பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்பனை செய்யும் பிரத்தியேக உரிமையை வழங்குவதற்கு 1982 ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விதிகளுக்கு அமைவாகவும் நடைமுறையில் உள்ள பொது விதிமுறைகளுக்கு அமைவாகவும் கீழ் குறிப்பிட்டிருக்கும் விதிகளுக்கு அமைவாகவும், 2008 ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி மு. ப. 10.00 மணி வரை கேள்விப் பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் கேள்விப் பத்திரம் விற்க முடியாவிடின் 2008 ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி மீண்டும் விற்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் நாட்டில் எந்த பிரதேச செயலகத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ள கூடியதான விண்ணப்பப்படிவத்தில் முறையாக தயாரித்து கீழ் குறிப்பிட்ட நிரந்தர வைப்புப் பணத்தை செலுத்தியதற்காக பெறப்பட்ட பற்றுச்சீட்டுடன் இணைத்து கடித உறையின் இடது மூலையில் மேற்படி கேள்விப்பத்திரம் வழங்கும் தவறணையின் பெயரும் இலக்கத்தையும் தெளிவாக எழுதி இப்பிரதேச செயலகத்தில் வைத்திருக்கும் கேள்விப் பெட்டியில் அல்லது படல்கும்புர பிரதேச செயலாளரின் பெயருக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

கேள்விப் பத்திரம் திறக்கப்படும்போது அப்பத்திரங்களில் ஏற்பட்டிருக்கும் எல்லா திருத்தங்களுக்கும் கேள்விப்த்திரக்காரர்கள் தனது கை ஒப்பத்தை இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். அப்படி அல்லாத படிவங்கள் நிராகரிக்கப்படும். கேள்விப்பத்திரம் விற்கப்படும் தினமான 2008 ஒற்றோபர் 20 ஆந் திகதி கேள்விப்பத்திரக்காரர்கள் சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் வழங்குவது 2008, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி மு. ப. 10.00 மணியுடன் முடிவடையும். எந்தவொரு விடயமும் குறிப்பிடப்படாத கேள்விப்பத்திரங்களை அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்கு உண்டு. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர்கள் எவர் என அறிந்தவுடன் அன்றைய தினம் 12.00 மணிக்கு முன் அக்கேள்விப்பத்திரக்காரர்கள் படல்கும்புர பிரதேச செயலாளரின் பெயருக்கு இரண்டு மாத வாடகைக்கு குறைவானதாக கணிக்கப்படும் தொகையை பிணைப்பணமாக வைப்புச் செய்தல் வேண்டும். அத்தோடு குத்தகை நிபந்தனையில் கை ஒப்பம் இடல் வேண்டும். மேலதிக விவரங்கள் கடமை நேரங்களில் படல்கும்புர பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

டபிள்யூ. எஸ். ஐ. விஜேசேகர,
பிரதேச செயலாளர்,
படல்கும்புர.

பிரதேச செயலகம்,
படல்கும்புர,
2008, செத்தெம்பர் 15.

### அட்டவணை

| தொடர் இல. | பிரிவு | தவறணை அமைந்த கிராமம் | திறந்திருக்கும் நேரம் | வைப்புத் தொகை | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப் படும் திகதி |
|---|---|---|---|---|---|
| 1. | மொனராகலை மாவட்டத்தில் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவு | பல்லேவராதொலை கமேவெல | மு. ப. 11.00 முதல் பிற்பகல் 2.00 மணி பி. ப. 4.00 முதல் பிற்பகல் 8.00 மணிவரை. | ரூபா 500 | 2008 ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி மு. ப. 10.00 மணிவரை |

10- 216

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் கம்பனி உருவாக்கம் சம்பந்தமான பொது அறிவித்தல்**

மேற்குறிப்பிடப்பட்ட கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்ட கம்பனியின் பதிவாக்கல் சம்பந்தமான தகவல்கள் பொதுமக்களின் கவனத்திற்காக இத்தால் தெரியப்படுத்தப்படுகிறது.

கம்பனியின் பெயர் : மைக்ரோன் பீசி (பிரைவட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 65288
பதிவு செய்த திகதி : 26. 08. 2008
கம்பனியின் விலாசம் : இல. 114 1/1, மெசன்ஜர் வீதி, கொழும்பு 12.

ஜே அன்ட் ஏ மனேஜ்மன்ட் சிஸ்டம்ஸ் (தனியார்)
வரையறுக்கப்பட்டது - கம்பனி செயலாளர்.

10-333

---

**2007 ஆம் இலக்க 7 ஆம் கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்**

கம்பனியின் பெயர் : வரிங்டன் (பிரைவட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 65540
பதிவு செய்த திகதி : 15.09.2008
பதிவு செய்த அலுவலகம் : இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு 02.

எச். யூ. பி. குணரட்ண,
செயலாளர்.

வரிங்டன் (பிரைவட்) லிமிட்டட்.
இல. 8, ஹுனுப்பிட்டி குறுக்கு வீதி,
கொழும்பு 2.

10-302

---

**அறிவித்தல்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனி 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 09 ஆம் பிரிவிற்கமைய 19.08.2008 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : லைப்ஸ்ரைல் நேர்சிங் கெயார் (பிரைவட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 65204
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 136/2ஏ, துட்டகெமுனு வீதி, களுபோவில, தெஹிவளை

என். ஹேவா கன்டம்பி,
சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு,
கம்பனி சட்டத்தரணி.

10-346

---

**அறிவித்தல்**

கீழ்க் காணும் கம்பனி 2007 ஆம் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) இன் கீழ் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

கம்பனியின் பெயர் : கமகே குரூப் ஓப் கம்பனீஸ் (பிரைவட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 65153
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 13. 08. 2008
கம்பனியின் விலாசம் : இல. 9/17, சுரனிமல ஒழுங்கை கொழும்பு 06

10-345

---

**கூட்டிணைத்தல் அறிவித்தல்**

கம்பனியின் பெயர் : வரையறுக்கப்பட்ட கொலன்னாவ யக்மடித்த விவசாய உற்பத்தி (தனியார்) கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 64018
பதிவுத் திகதி : 06.05.2008
கம்பனி பதியப்பட்ட முகவரி : கொலன்னாவை, யக்மடித்த, புலுதொட

கம்பனியின் செயலாளர்.

10-266

---

**கூட்டிணைத்தல் அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ், கம்பனியானது கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

கம்பனியின் பெயர் : டோமோ பாமிங்ஸ் (பிரை) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பி. வி. 65016
ஒருங்கிணைக்கப்பட்ட திகதி : 15.08.2008
பதிவு செய்யப்பட்ட விலாசம் : 67/1, ஹுலுதாகொட ரோட், கல்கிஸ்ஸை.

ஆர். ஏ. கிராகம (சட்டத்தரணி),
கம்பனி செயலாளர்.

10- 244

**பொறுப்பு வரையறுத்த கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*கம்பனியின் பெயர் :* சீரீ றியல் எஸ்டேட் (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பீவீ 65461
*கூட்டிணைப்பு திகதி :* 09.09.2008
*கம்பனி பதியப்பட்ட முகவரி :* சீரீ றியல் எஸ்டேட் (பிரைவட்) லிமிட்டட் லெவல் 04, மெஜஸ்டிக் சிட்டி, இல. 10, ஸ்ரேஷன் வீதி, கொழும்பு 04.

பிஸ்னஸ்மேட் (பிரைவட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

45, பிறேபுறூக் வீதி,
கொழும்பு 02.

10-285

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கம்பனி கூட்டிணைத்தல் சம்பந்தமான பொது அறிவித்தல்

மேற்குறிப்பிடப்பட்ட கம்பனிச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்ட கம்பனியின் கூட்டிணைத்தல் சம்பந்தமான தகவல்கள் பொதுமக்களின் கவனத்திற்காக இத்தால் தெரியப் படுத்தப்படுகிறது.

*கம்பனியின் பெயர் :* ரசிகா குரூப் (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம் :* பீ. வீ. 65391
*பதிவு செய்த திகதி :* 03.09.2008
*கம்பனியின் விலாசம் :* இல. 159/சீ, கண்டி வீதி, ஆண்டான்குளம, திருகோணமலை

ஜே அனட் ஏ மனேஜ்மன்ட் சிஸ்டம்ஸ் (தனியார்)
வரையறுக்கப்பட்டது.
கம்பனி செயலாளர்.

10-334

---

அற்றோணித் தத்துவப்பத்திரம் இரத்துச் செய்தல்

வைக்கால் கையிமல் வடக்கு எனும் விலாசத்தில் வசித்தவரும், தற்போது இத்தாலி மெசினா நகரில் வசிப்பவருமான, வர்ணகுலசூரிய நிஸாந்த பிறியலால் குறேரா ஆகிய நான், பொது சனத்துக்கும் இலங்கை குடியரசுக்கும் அறிவிப்பதாவது, கைமல் வடக்கு வைக்கால் எனும் இடத்தில் வசிக்கும், வர்ணகுலசூரிய சுஜீவாசந்திகா தவரேரா என்பவருக்கு கொடுத்திருந்த மேற்படி அற்றோனி உரிமையை பிரசித்த நொத்தரிசு P டில்றுக்சி E பர்னாந்து என்பவரின் முன்னிலையில் இலக்கம் 7569. 2007. 02. 05 ஆந் திகதியில் எழுதப்பட்ட அற்றோனி உறுதிப்பத்திர உரிமை இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் இன்று தொடக்கம் எந்தவித கொடுக்கல் வாங்கல்களிலும் இருந்து விலகிக் கொள்வதாகவும் இத்தால் அறியத்தருகிறேன்.

வர்ணகுலசூரிய நிஸாந்த பிறியலால் குறேரா

10 - 265

---

**அறிவித்தல்**

பக்ஸர் லங்கா (தனியார்) லிமிட்டெட் மற்றும் எவரி டெனிஸன் (தனியார்) லிமிட்டெட் ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்படல்

பக்ஸர் லங்கா (தனியார்) லிமிட்டெட்,(பக்ஸர்) மற்றும் எவரி டெனிஸன் (தனியார்) லிமிட்டெட் (எவரி டெனிஸன்) ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபையிகளினால் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி மேற்படி பக்ஸர், எரி டெனிஸன் நிறுவனங்கள் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 (2) ஆம் பிரிவிற்கமைய ஒன்றிணைக்கப்படுவதற்கான அறிவித்தல் இத்தால் கொடுக்கப் படுவதோடு அங்ஙனம் ஒன்றிணைக்கப்படுவதனாலான புதிய நிறுவனம் எவரி டெனிஸன் லங்கா (தனியார்) லிமிட்டெட் என பெயரிடப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஒன்றிணைக்கப்படலானது கம்பனிகள் பதிவாளர் நாய கத்தின் அனுமதி பெறப்படுகின்ற திகதியிலிருந்து அமுலுக்கு வரு மெனவும் மேலும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

தலைவர்,
பக்ஸர் மற்றும் எவரி டெனிஸன்.

10- 225

# ஏல விற்பனைகள்

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பிஎல்சி - மாத்தளை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**வசிப்பிடத்திற்குப் பொருத்தமான சொத்து பகிரங்க ஏல விற்பனை**

***மாத்தளை நகரசபை எல்லைக்குட்பட்ட நகரத்திற்கு மிகவும் கிட்டிய மாத்தளை மல்வத்த பாதையில் அமைந்துள்ள "கொடமடேபிடி யேபாரேஹேன" எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். ராஜசேகரன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 13.06.1992 ஆந் திகதிய 4141ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் லொட் 1என அடையாளமிடப்பட்ட காணியும் அதனுள் அடங்கும் மற்றும் சகலதும் ஆகும். இதன் பரப்பளவு 20 பேர்ச்சஸ்.***

*(இவ்வாதனம் மாத்தளையில் வசிக்கும் செய்யத் முஹம்மத் முஹம்மத் ரசாத் என்பவர் கடனாளியாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக கொமர்ஷல் வங்கி பிஎல்சி யினால் பெறப்பட்ட ஆதனம்.)*

இவ்வாதனம் 06.11.2008 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- 12.09.2008 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 28.08.2008 ஆந் திகதிய "திவயின", "தினக்குரல்", "ஐலண்ட்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

***கொடுப்பனவு செய்யும் முறை.***- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்:-

கொள்முதல் விலையில் 10 வீதம் , உள்நாட்டு வரி 1 வீதம், ஏலவிற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் நொத்தாரிஸ் கட்டணம் மற்றும் விற்பனை உடன்படிக்கை கட்டணம் ரூ. 2000 இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500 சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90 வீதம் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் வங்கி பிஎல்சி தலைமைக் காரியாலயத்தில் அல்லது மாத்தளை கிளையில் செலுத்தப்படுதல் வேண்டும்.

***உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.***- "முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பிஎல்சி இல. 70, இராஜ வீதி, மாத்தளை என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 066-2222485 / 2231880 / 2231870

I. W. ஜயசூரிய
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்,

இல. 83/5, போமலுவ பாதை,
வட்டபுலுவ, கண்டி.
தொலைபேசி : 081-2211025, 0714 – 755974 பெக்ஸ் 081 – 2211025

10-280/3

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பிஎல்சி - நிகவரெட்டிய கிளை

*1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க வசிப்பிடச்சொத்து பகிரங்க ஏல விற்பனை**

***நிகவரெடிய நகருக்கு மிக அண்மையில் அமைந்துள்ள புதுமுன்னவ கிராமத்தில் அமைந்துள்ள "கல்கொடஹேன்யாய" என்றழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டப். ஏ. சிறிசேன என்பவரினால் 09.01.2005 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 1863ஆம் வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்டு லொட் 03 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு. இதன் பரப்பளவு 80 பேர்ச்சஸ் ஆகும். அத்துடன் இதனுள்ளடங்கும் சகலதுமாகும்.***

*(இவ்வாதனம் நிகவரெட்டியைச் சேர்ந்த ஹேரத் முதியன்சேலாகே நவரத்ன பண்டார என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி பிஎல்சி யினால் பெறப்பட்ட ஆதனம்.)*

இவ்வாதனம் 03.11.2008 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- 27.06.2008 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 16.06.2008 ஆந் திகதிய "தினக்குரல", மற்றும் 20.06.2008 ஆந் திகதிய "லக்மின" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

***ஆதனத்தை வந்தடைதல்.***- நிகவரெட்டிய மணிக்கோட்டு கோபுரத்திலிருந்து ஹிலோகம பாதையில் சுமார் 400 மீற்றர் தூரம் சென்று வலது பக்கமாக திரும்பி சுமார் 150 மீற்றர் தூரம் சென்றால் இந்தப் பாதையின் வலது பக்கமாக இவ்வாதனம் அமைந்துள்ளது.

***கொடுப்பனவு செய்யும் முறை.***- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

**கொள்முதல் விலையில் 10 வீதம் , உள்நாட்டு வரி 1 வீதம், ஏலவிற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் நொத்தாரிஸ் கட்டணம் ரூ. 2000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500, சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90 வீதம் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் வங்கி பிஎல்சி தலைமைக் காரியாலயத்தில் அல்லது நிக்கவரெட்டிய கிளையில் செலுத்தப்படுதல் வேண்டும்.**

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.- "முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பிஎல்சி "நிகவெரட்டிய கிளை, 48ஈ, ஹிலோகம வீதி, நிகவரெட்டிய" என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 037-2260705 / 2260706 / 2260704

I. W. ஜயசூரிய
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 83/5, போமலுவ பாதை,
வட்டபுலுவ,
கண்டி.
தொலைபேசி : 081-2211025,
0714 – 755974
பெக்ஸ் 081 – 2211025

10-280/4

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பிஎல்சி – கட்டுகஸ்தொட்டை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) 4ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**வத்துகாமம் நகரசபை எல்லைக்குட்பட்ட வத்துகாமத்தில் அமைந்துள்ள வத்துகாமம் கண்டி பெருந்தெருவுக்கு மிகக் கிட்டிய ''ஹிரான் வளவ்வே வத்த '' எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டப். எம். வீரகோன் என்பவரினால் 06.06.1987 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 3048 ஆம் வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்டு லொட் 05 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு. இதன் பரப்பளவு 3.075 பேர்ச்சஸ் ஆகும். அத்துடன் இதனுள்ளடங்கும் கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஏல விற்பனை.**

*(இவ்வாதனம் தடெல்ல லஹூமோதரகே வசந்த அபேசேகர என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி பிஎல்சி யினால் பெறப்பட்ட ஆதனம்.)*

இவ்வாதனம் 06.11.2008 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு** .- 11.07.2008 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 28.06.2008 ஆந் திகதிய ''லக்பிம'', ''த ஐலண்ட்'', ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- வத்துகாமம் நகர மத்தியிலிருந்து பாரதி தமிழ் வித்தியாலய பாதையில் சுமார் 20 மீற்றர் தூரம் சென்றால் தமிழ் வித்தியாலயத்திற்கு முன்பாக இவ்வாதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்:-

கொள்முதல் விலையில் 10 வீதம் , உள்நாட்டு வரி 1 வீதம், ஏலவிற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் தொத்தாரிஸ் கட்டணம் ரூ. 2000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500, சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90 வீதம் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் வங்கி பிஎல்சி தலைமைக் காரியாலயத்தில் அல்லது கட்டுகஸ்தொட்டை கிளையில் செலுத்தப் படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- ''முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பிஎல்சி கட்டுகஸ்தொட்டை கிளை, மடவளை வீதி, கட்டுகஸ்தொட்டை'' என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 037-2499836 / 2498341 / 2497910

I. W. ஜயசூரிய
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 83/5, போமலுவ பாதை,
வட்டபுலுவ,
கண்டி.
தொலைபேசி : 081-2211025, 0714 – 755974
பெக்ஸ் 081 – 2211025

10-280/5

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சி நுவரெலியா கிளை –

*1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) 4பிரிவின் கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க வசிப்பிடத்திற்கு மற்றும் சுற்றுலா வியாபாரத்திற்கு பொருத்தமான சொத்து நுவரெலிய நகர சபை எல்லைக்குட்பட்ட வெதபோ்ன் பாதையில் அமைந்துள்ள பர்ன்கிளிப் எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் டப்.பீ.கே.எச்.ஆர். குணவர்தன என்பவரினால் 26.03.2003 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 742ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு லொட் 01 அத்துடன் இதனுள்ளடங்கும் கட டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இதன் பரப்பளவு 15 பேர்ச்சஸ் ஆகும். வரிப்பணம் இலக்கம்- 7.12 , 7.12 வெதபர்ன் வீதி, நுவரெலியா) ஏல விற்பனை)**

*(இவ்வாதனம் விதாரன கமகே ஒஸ்மன் என்பவர் கடப் பாடுடைய வராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி பிஎல்சி யினால் பெறப்பட்ட ஆதனம்.)*

இவ்வாதனம் 05.11.2008 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 28.12.2007 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 22.08.2008 ஆந் ''திகதிய'' ''திவயின'', ''தினகரன்'', ''டேலி நிவ்ஸ'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்தப்படல் வேண்டும் :-

கொள்முதல் விலையில் 10 வீதம் , உள்நாட்டு வரி 1 வீதம், ஏலவிற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் தொத்தாரிஸ் கட்டணம் ரூ. 2000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500, சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90 வீதம் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் வரை யறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி பிஎல்சி யில் செலுத் தப்படுதல் வேண்டும். மிகுதிப் பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத்தவறினால் செலுத்தப்பட்டுள்ள 10 வீதம் பணத்தை இழக்க நேரிடும். அத்துடன் இச்சொத்து மீண்டும் விற்பனை செய்யப்படுதற்கு உரிமை உண்டு.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.- ''பதில் பொது முகாமை யாளர், (கடன் அறவிடுதல்) வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி பி.எல்.சி., எச். என்.பி. டவர்ஸ், இல. 479, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10'' தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 011-2661821, 011 – 2661815

I. W. ஜயசூரிய
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 83/5,
போமலுவ பாதை,
வட்டபுலுவ,
கண்டி.
தொலைபேசி : 081-2211025, 0714 – 755974
பெக்ஸ் 081 – 2211025

10-280/6

**1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் விற்பனை**

**பெறுமதிமிக்க வசிப்பிடத்திற்கு மற்றும் விசசாயத்துக்கு பொருத்தமான சொத்து ஏல விற்பனை**

**மாத்தளை மாவட்டம் உடுகொட உடசியபத்துவ, திமுல்கமுவ கிராமத்தில் அமைந்துள்ள "சண்டிலண்ட் எஸ்ட்டேட்" எனும் காணியில் ஒரு பகுதி (உத்துரு மாத்தளை குரூப் ) உரிமம் பெற்ற நில அளவையாளர் நு. ஞ. ஐ. ராஜகருணா என்பவரினால் 03. 11. 2000 ஆந் திகதி அளவை செய்யப்பட்டு பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இதன் பரப்பளவு 72 பேர்ச்சஸ்.**

*(இவ்வாதனம் அந்தனி ரங்க துஷார மற்றும் பெரியானன் பூபதி ஆகியோர் கடப் பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வரையறுக்கப்பட்ட ஹட்டன் நாஷனல் வங்கி பிஎல்சி யினால் பெறப்பட்ட ஆதனம்)*

**ஆதனத்தை வந்தடைதல்.- மாத்தளை நகர மத்தியிலிருந்து தம்புள்ள பெருந்தெருவில் சுமார் 14.6 கி. மீ. தூரம் (40 மாத்தளை கி. மீ. கல் வரை) சென்றால் பாதையின் இடது பக்கமாக எல்லையானதாக இவ்வாதனம் அமைந்துள்ளது.**

இவ்வாதனம் 29.10.2008 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு** .- 01.08.2008ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 21.08.2008 ஆந் "திகதிய", "திவயின", "தினகரன்", "த ஜலண்ட்", பத்திரிகை களையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்தப்படல் வேண்டும் :-

கொள்முதல் விலையில் 10 வீதம் , உள்நாட்டு வரி 1 வீதம், ஏலவிற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் நொத்தாரிஸ் கட்டணம் கட்டணம் ரூ. 2000 இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500 சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள் முதலில் மிகுதி 90 வீதம் விற்பனை நாளிலிருந்து சொல்லப்பட்ட 90 வீதம் பணத்தொகையை 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி பிஎல்சி யில் செலுத்தப்படுதல் வேண்டும். சொல்லப்பட்ட 90 வீதம் பணத்தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் செலுத்தப்பட்டுள்ள 10 வீதம் பணத்தை இழக்க நேரிடும். அத்துடன் சொல்லப்பட்ட ஆதனம் மீண்டும் விற்பனை செய்யப் படுதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- பதில் பிரதான முகாமையாளர், (கடன் அறவிடுதல்) வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி பி.எல்.சி., எச். என்.பி. டவர்ஸ், இல. 479, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10 தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 011-2661821, 011 – 2661815

I. W. ஜயசூரிய
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 83/5, போமலுவ பாதை,
வட்டபுலுவ,
கண்டி.
தொலைபேசி : 081-2211025, 0714 – 755974
பெக்ஸ் 081 – 2211025
10-280/7

---

**பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பிஎல்சி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின்கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க இரண்டு சொத்துக்களின் ஏலவிற்பனை**

**விற்பனை 1**

**அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் யூ. திலகா நந்தனீ அவர்களால் வரையப்பட்டு, பிரிக்கப்பட்ட, 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆந் திகதியிடப்பட்ட 600 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு A எனக் குறிப்பிடப்பட்டுள்ள. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், ரயிகம் கோரளே, உடுகஹ பத்துவே, ஹொரண பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அறக்கவில கிராமத்தில் அமைந்துள்ளதும் ஹிங்குரன்ஹேன என அழைக்கப் படுவதுமான காணி. அனைத்தும் உள்ளடங்கலாக**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 3று. 8.89பே.)**

**பாதையும் அமைவிடமும் :- கொழும்பில் இருந்து அவிஸ்ஸாவெல்ல வீதி ஊடாக சுமார் 34 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று இடது பக்கத்தில் உள்ள இங்கிரிய வீதிக்குத் திரும்பி, 9.1 கிலோ மீற்றர் வரை சென்று வலது பக்கத்திற்குத் திரும்பி எதிரேயுள்ள தனிப்பட்ட வீதி வழியாக 150 மீற்றர் வரை சென்றதும் குறிப்பிட்ட மணல் வீதியின் வலது பக்கமாகக் காணப்படும் காணித்துண்டு.**

*(கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவாதந்திரி அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு 2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதியிடப்பட்ட 1047 ஆம் இலக்க அடைமான உறுதி மூலம் ஆனந்த கத்திரியாராச்சி அவர்களால் பான் ஏஷியா பாங்கில் கோப்பரேஷன் பிஎல்சி க்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

பான் ஏஷியா பாங்கில் கோப்பரேஷன் பிஎல்சி யினால் எமக்களிக் கப்பட்ட அதிகாரத்தின்படி 2008 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க் கிழமை மு. ப. 11.00 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

அதே தினம் அதே இடத்தில் நண்பகல் 12.00 மணிக்கு ஆரம்பமாகும்.

**விற்பனை 2**

**அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் ஜே. சோமசிரி அவர்களால் வரையப்பட்டு, பிரிக்கப்பட்ட, 2000 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதியிடப்பட்ட 871 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள, மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், ரயிகம் கோரளே, உடுகஹ பத்துவே, ஹொரண பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அறக்கவில, கிராமத்தில் அமைந்துள்ளதும் ஹிங்குரன்ஹேன என அழைக்கப்படுவதுமான காணி. அனைத்தும் உள்ளடங்கலாக**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1று. 39.90பே )**

**பாதையும் அமைவிடமும்** .- கொழும்பில் இருந்து அவிஸ்ஸாவெல்ல வீதி ஊடாக சுமார் 34 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று இடது பக்கத்தில் உள்ள இங்கிரிய வீதிக்குத் திரும்பி, 9.1 கிலோ மீற்றர் வரை சென்று வலது பக்கத்திற்கு திரும்பி, எதிரேயுள்ள தனிப்பட்ட வீதி வழியாக 150 மீற்றர் வரை சென்று இடது பக்கமாக காணிக்கென ஒதுக்கப்பட்டுள்ள 10 அடி அகலமான (192 ஆம் இலக்க வரைபடத்தல் துண்டு 4) பிட்ட அல வீதியாக சுமார் 40 யார் தூரம் வரை சென்றதும் குறிப்பிட்ட காணித்துண்டை அடையலாம்.

*(கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவாதந்திரி அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு 2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதியிடப்பட்ட 1045 ஆம் இலக்க அடைமான உறுதி மூலம் வரையறுக்கப்பட்ட ஹை கிறோ லங்கா எக்ஸ்போர்ட்ஸ் (தனியார்) நிறுவனத்தின் மூலம் பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து).*

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் பத்து சதவீதம் (10%) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி ஒரு சதவீதம் (1%) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு இரண்டரை சதவீதம் (2.5%)
(4) 75, 000/ ரூபா அல்லது அதற்குக் கிட்டிய மொத்த விளம்பரச் செலவில் 50%
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆந் திகதி வெளியான "லக்பிம" மற்றும் "சிலோன்" "டெயிலி நியூஸ்" பத்திரிகைகளையும் அரசாங்க வர்த்தமானி அறிவித்தலையும் தமிழ் மொழி மூலமான அறிவித்தலுக்கு 2007 மார்ச் 30 ஆந் திகதிய சுடர் ஒளி செய்திப் பத்திரிகையையும் பார்வையிடவும்.

மேலதிக விபரங்கள், உறுதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை, "சிரேஷ்ட முகாமையாளர், சட்டப்பிரிவு , பான் ஏஷியா பாங்கிங் கொப்பரேஷன் பீஎல்சி, 450, காலி வீதி, கொழும்பு 3" எனும் முகவரியில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இலக்கங்கள் 2565573, 2565565

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம் கொண்ட ஐஎஸ்ஓ 9001 : 2000
தரச் சான்றிதழ் பெற்ற ஒரேயொரு பிரபல முன்னோடி
பட்டய ஏலவிற்பனையாளர், பெறுமதி மதிப்பீட்டு
ஆலோசகர் மற்றும் காணித் செயல் முகவர்.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
| இல. 24, டொரிங்டன் வீதி, கண்டி | இல. 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 05 |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 2585408 |
| தொ./ ஃபெக்ஸ் : 081-2224371 | தொ./ ஃபெக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணைத்தல் : www.shokmanadsamerawickreme.com

10 -335

## 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் சட்டத்தின் 09 ஆம் பிரிவின்கீழான விற்பனை

### நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சி

*பெறுமதிமிக்க காணித்துண்டு ஒன்றின் ஏலவிற்பனை*

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, மெத பற்று மாட்டாகொட கிராமத்தில் அமைந்துள்ளதும் நவாசி கஹாவத்தை என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் யூ. எம். ஆரியசேன தயாரித்த 16.02. 2003 ஆந் திகதிகொண்ட 1588 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித் துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 1 என்பதற்கு எல்லைகளாக வடக்கில் : வீதி ; கிழக்கில் : துண்டு 2; தெற்கில் : 1555 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 2 மேற்கில் : பி. ச. வீதி என்பன அமைந்துள்ளன. 1588 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பதின்மூன்று தசம் ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 13.6பே) இது கம்பஹா காணிப் பதிவகத்தில் ஈ 557/257 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**உத்தரவுபெற்ற நில அளையாளர் எஸ். எம். சந்திரசிறி தயாரித்த 21. 03. 1999 ஆந் திகதிகொண்ட 1555 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் துண்டு 2 என அடையாளமிடப்பட்ட (3 மீ. அகலம்) வீதிக்கென ஒதுக்கப்பட்ட காணியிலும் அதன்மீதும் அதன் வழியாகவும் வழியுரிமையுடன் சேர்த்து.**

**மேற்படி மத்தேகொட கிராமத்தில் கொட்டாவயிலிருந்து பொல்கஸ் ஸோவிட்ட செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ளதும் மத்தே கொடவத்த என அழைக்கப்படுவதுமான காணியின் 7216 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 13 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (20 அடி அகலப் பாதைக்கென ஒதுக்கப்பட்டது). மேற்படி துண்டு 13 என்பதற்கு எல்லைகளாக வடக்கில் துண்டுகள் 4, 6, 7, 8, 9, 11, 12, 10 மற்றும் 14; கிழக்கில் : மேற்படி வரைபடத்திலுள்ள துண்டு 8 பீ1, மற்றும் துண்டு 3; தெற்கில் : துண்டுகள் 05; மேற்கில் : துண்டு 02 மற்றும் துண்டு 05 என்பன அமைந்துள்ளன. மேற்படி வரைபடத்தின்படி இதன் பரப்பளவு இரண்டு தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 2.5பே) இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் தொ/பA 363/91 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

*(இவ்வாதனம் நிட்டம்புவ, ரணபொக்குணகம சீபீ 4 – 1 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ரணசிங்க ஹெட்டியாராச்சிகே சமதர சமன்மலி மல்காந்தி மற்றும் வர்ணகுலசூரிய நெல்சன் கிரிஸ்டோபர் கயன் சிந்தக்க ரொட்ரிகோ ஆகியோரால் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டதாகும்.)*

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சியால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரித்தின்கீழ் 2008 ஒற்றோபர், 30 ஆந்திகதி பி. ப. 2.30 மணி தொடக்கம் அதே இடத்தில் நான் பகிரங்க ஏலத்திலும் விற்பனை செய்வேன்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் பத்து சதவீதம் 10% (கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத்

திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் கொள்வனவு விலைக்கு ஏற்புடைத்தான வரிகள் அறிவீடுகள் என்பவற்றுடன் சேர்த்து நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ க்குச் செலுத்தப்படவேண்டும் ) ;

(2) 1% உள்ளூர் அதிகார சபைக்கான வரி ;

(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% ;

(4) விளம்பரச் செலவுகளும் வங்கியால் உறப்பட்ட ஏனைய செலவுகளும் ;

(5) விற்பனையின் நிபந்தனைகளுக்கு நொத்தாரிசுகளின் அத்தாட்சிப்படுத்தும் கட்டணம் ரூ. 500 ;

(6) எழுதுவினைஞரின் அழைப்போரினதும் கட்டணம் ரூபா. 500

உரித்து உறுதிகளையும் அனைத்து ஆவணங்களையும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ, இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்ற முகவரியில் பார்வையிடலாம்

